பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 10 வள்ளுவர் ஆண்டு 2056 கார்த்திகை 22 திங்கட்கிழமை 08.12.2025 கதிர் 030

## இது ரகசியம் அல்ல!

தமிழ்காங்கிரஸ்தலைமையிலான 'சைக்கிள்'கூட்டணியில் இருந்து சங்கு 'வீடு'பக்கம் தாவிவிட்டது. தமிழ் அரசுக் கட்சிக்கும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக்கூட்டணிக்கும்இடையில் ☞2

# உண்ணத் தகுதியற்ற அரிசியை சந்தைக்கு அனுப்பும் மோசடி

## வாய்ப்பைப் பயன்படுத்தி நடவடிக்கை

உண்பதற்கு பொறுத்தமற்ற, வெள்ளத்தால் சேதமடைந்த அரிசியை சட்டவிரோதமாகப் பதப்படுத்தி சந்தைக்கு வெளியிடும் மோசடியை பொது சுகாதார பரிசோதகர்கள் கண்டுபிடித்துள்ளனர். கண்டி மாவட்டத்தில் ஹாரிஸ்பத்துவ பகுதியில் இவ்வாறு வெள்ளத்தால் சேதமடைந்த அரிசியை விற்பனை செய்த சந்தேகநபர்கள் பொது சுகாதார பரிசோதகர்களால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களால் பதுக்கி வைக்கப்பட்டிருந்த பாவனைக்குதவாத சுமார் 1,000 கிலோ கிராம் அரிசி கைப்பற்றப்பட்டுள்ளதாக இலங்கை பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் பிரதீப் போரலெஸ்ஸா தெரிவித்துள்ளார்.

இதுபோன்ற மோசடி நடவடிக்கைகளை தொடர்பில் நாடு முழுவதும் அதிகாரிகள் கண்காணித்து வருகின்றனர் என்று தெரிவித்த அவர், இத்தகைய செயல்களில் ஈடுபட வேண்டாம் என்று வர்த்தகர்களை வலியுறுத்தியுள்ளார். குறிப்பாக இந்த நேரத்தில் அரிசி வாங்கும்போது விழிப்புடன் இருக்குமாறு அவர் பொதுமக்களிடமும் கேட்டுக் கொண்டுள்ளார்.

இத்தகைய நடவடிக்கைகள் குறித்துத் தகவல் தெரிந்தால், பொதுமக்கள் தங்கள் பகுதியின் பொது ☞2

## மனிதம் இன்னும் வாழ்கிறது

வெள்ளத்தில் சிக்கி உயிர் தப்பிக்கப் போராடிய சமயத்தில் தவற விடப்பட்ட தங்க நகைப் பொதியை தனது அயலவரிடம் மீண்டும் ஒப்படைத்துள்ளார் மாவிலாறு பகுதியைச் சேர்ந்த ஒருவர்.

மாவிலாறு, சோமபுர பகுதியில் வெள்ளத்தில் மூழ்கிய தமது வீட்டின் கூரையிலிருந்து குடும்பத்தினருடன் ஹெலிகாப்டரில் மீட்கப்பட்ட சுஜித், மீட்பு முயற்சியின்போது தன்வசம் இருந்த தங்க ஆபரணங்கள் அடங்கிய பையைத் தவறவிட்டிருந்தார். அது அதிர்ஸ்டவசமாக அண்டை வீட்டின் வேலியில் சிக்கிக் கொண்டிருந்தது.

வெள்ளம் அதிகரித்ததால், சுஜித் தனது மனைவி, குழந்தைகளுடன் தங்க ஆபரணங்கள் அடங்கிய பை, பணம், பிறப்புச் சான்றிதழ்கள் மற்றும் சில துணிகளுடன் வீட்டின் கூரையில் ஏறி அமர்ந்துகொண்டார். ☞2

# 2 விடயங்களில் ஒருமித்துச் செயற்பட 'வீடு'–'சங்கு' கட்சிகள் நேற்று இணக்கம்

## தொடர்ந்து பேசுவதாகவும் தீர்மானம்

மாகாண சபைத் தேர்தலை வைப்பதற்கான அழுத்தத்தை ஆளும்தரப்புக்குக்கொடுப்பதுமற்றும் தமிழர்பிரச்சினைக்கானஅரசியல்தீர்வு தொடர்பான பொது ஆவணம் ஒன்றை உருவாக்குவது ஆகிய விடயங்களில் இணங்கிச் செயற்படுவதற்கு தமிழ் அரசுக் கட்சியும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக்கூட்டணியும்இணங்கியுள்ளன.

உள்ளூராட்சி சபைத் தேர்தலைத் தொடர்ந்து அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைமையிலான 'சைக்கிள்'கூட்டணியுடன் 'கொள்கை இணக்கம்'ஒன்றைஏற்படுத்திக்கொண்டு செயற்பட்டு வந்த 'சங்கு'கூட்டணியான ஜனநாயகத்தமிழ்த்தேசியக் கூட்டணி, இனிவரும்காலத்தில்'வீடு'சின்னத்தைக் கொண்ட தமிழ் அரசுக் கட்சியுடன் சேர்ந்துஅரசியல்முன்னெடுப்புக்களில் ஈடுபடுவதற்கு இந்த இணக்கம் வழி வகுக்கும்என்றுதெரிவிக்கப்படுகின்றது.

தமிழ் அரசுக் கட்சியின் அழைப்பின் பேரில், யாழ்ப்பாணம், மார்ட்டின் வீதியிலுள்ள அதன் தலைமை ☞2

# முட்டை விலை ரூ. 70 வரை எகிறும் இறைச்சிக்கு தட்டுப்பாடு வரக்கூடும்

## சங்கத் தலைவர் தெரிவிப்பு

நாட்டில் ஏற்பட்ட பேரிடரால் எதிர்வரும் பண்டிகைக் காலப்பகுதியில் கோழி இறைச்சி மற்றும் முட்டைகளுக்குத்தட்டுப்பாடுஏற்படக்கூடும். வெள்ளத்தில் சிக்கி பண்ணையில் வளர்க்கப்பட்டு வந்த 28 இலட்சத்துக்கும் மேற்பட்ட கோழிகள் உயிரிழந்துள்ளன. ☞6

950 தொன் பொருள்களுடன்

# தமிழ்நாட்டின் உதவிக் கப்பல் கொழும்பை வந்தடைந்தது

'தித்வா' புயலால் நாடளாவிய ரீதியில் 21 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்ட மக்களுக்காகத் தொடர்ந்தும் சர்வதேசத்தின் உதவிகள் கிடைக்கப் பெற்று வருகின்ற நிலையில், நேற்று ஞாயிற்றுக்கிழமை ☞6

# அநுராதபுரத்தின் பேரிடர் பாதிப்பு தொடர்பாக அநுர நேரில் ஆய்வு

அநுராதபுரத்தில் பேரிடரால் முழுமையாகச் சேதத்தை எதிர்கொண்ட விவசாயிகளின் எண்ணிக்கை, விவசாயக் காணிகளின் அளவு மற்றும் தேவையான நிதி என்பன குறித்த அறிக்கையை எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்கு முன் வழங்குமாறு பணிப்புரை விடுத்துள்ள அரசுத் தலைவர் அநுரகுமார, இந்த இழப்பீடு நியாயமாகக் கிடைக்க வேண்டியவர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்றும், அதனை நீதியற்ற முறையில் யாரும் பெறக்கூடாது என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

பேரிடரால் பாதிக்கப்பட்ட ☞6

# பேரிடர் உதவிகளை வழங்கும்வரை ஆளும்தரப்பினரை விடமாட்டோம்

## சஜித் பிரேமதாச மக்களுக்கு உறுதிமொழி

ஆளும்தரப்புத் தேர்தல் காலத்தில் அளித்த வாக்குறுதிகள்போல் அல்லாமல், பாதிக்கப்பட்ட மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றும்வரை நாங்கள் தொடர்ந்து ஆளும்தரப்புக்கு அழுத்தம் கொடுப்போம் என ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா ☞2 தெரிவித்தார்.

# மீட்பு நடவடிக்கைகளுக்கு உதவ அமெரிக்கக் குழுவினர் வருகை

'தித்வா'சூறாவளி மீட்பு நடவடிக்கைகளுக்கு உதவியாக அமெரிக்க வான் போக்குவரத்துத் திறன்களைவழங்குவதற்காக,இரண்டுளீ-130மூ நீற்ஞரீளஷகூஷிளஷஉற்யிளவிவிமானங்களும் அமெரிக்க விமானப்படையின் 36ஆவது எதிர்பாராத அவசர நிலைகளுக்கான மீட்புக் குழுவினைச் சேர்ந்த விமானப் படையினரும் நேற்று கட்டுநாயக்க விமானத் தளத்தினை வந்தடைந்தனர்.

இக்குழுவினரை அமெரிக்கத் ☞6

# பேரிடரால் 21 லட்சம் பேர் பாதிப்பு மண்சரிவு எச்சரிக்கையும் நீடிப்பு

இலங்கை பேரிடர் பாதிப்பிலிருந்து ஓரளவு இயல்பு நிலைக்குத் திரும்பி வரும் நிலியலும் வடகீழ் பருவ பெயர்ச்சி மழை காரணமாக ஏற்கனவே மண்சரிவு அபாய சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்ட சில மாவட்டங்களுக்கு தொடர்ந்தும் அந்த எச்சரிக்கை நீடிக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் வசந்த சேனாதீர தெரிவித்தார்.

5 மாவட்டங்களில் 50 பிரதேச செயலகப்பிரிவுகளுக்கு விடுக்கப்பட்டுள்ள மண்சரிவு அபாய எச்சரிக்கை இவ்வாறு நீடிக்கப்பட்டுள்ளது. கண்டி, கேகாலை, மாத்தளை, குருணாகல் மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களிலேயே இவ்வாறு மண்சரிவு அபாய எச்சரிக்கை நீடிக்கப்பட்டுள்ளது. இவை தவிர இரண்டாம் கட்டத்தில் 4 மாவட்டங்களில் 22 பிரதேச செயலகப்பிரிவுகளுக்கு விடுக்கப்பட்டுள்ள மண்சரிவு அபாய எச்சரிக்கையும் நீடிக்கப்பட்டுள்ளது. மேலும் முதலாம் கட்டத்தில் 7 மாவட்டங்களில் 27 பிரதேச செயலகப்பிரிவுகளுக்கு விடுக்கப்பட்டுள்ள மண்சரிவு அபாய எச்சரிக்கையும் தொடர்ந்தும் நடைமுறையிலிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். ☞6

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் கு'ல் The Distinctive Voice of The Tamil Speaking People

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

நேற்று நடந்த சந்திப்பின் பின்னர் இரு தரப்பினரும் இரு விடயங்களில் இணைந்து செயற்படுவதற்கு இணங்கியிருப்பதாக அறிவித்திருக்கின்றனர். இந்த இணைவு, அணித் தாவல் நடக்கும் என்பது ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்ட விடயம்தான். அதற்கான அறிகுறிகள் முன்னரேயே தெரிந்தன.

இலங்கையில் ஏற்பட்ட பேரிடர் பாதிப்புக்கு இந்தியா உடனடியாகவழங்கியஉதவிகளுக்கு நன்றி தெரிவிப்பதற்கு தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைபின் தலைவர்களும் ஒன்று சேர்ந்து யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதரகத்திற்குச்சென்றது முதல்அறிகுறி. அந்தச் சந்திப்பிலேயே இது ஒரு ‘குறிப்பிடத்தகுந்த அரசியல் அறிகுறி’ என்று இந்தியத் தூதரக அதிகாரிகளிடம் தமிழ் அரசுக் கட்சித் தலைவர் தெரிவித்தும் இருந்தார். அதன் பின்னர் யாழ்ப்பாணம் மாநகரசபையின் தற்போதைய ஆட்சியின் முதலாவது பாதீட்டை காங்கிரஸ் தலைமையிலான ‘சைக்கிள்’கூட்டணி எதிர்த்தபோதும் ‘சங்கு’கூட்டணி ஆதரித்து அதனைவெற்றிபெறவைத்தமைஇரண்டாவது அறிகுறி.

ஆக, உள்ளூராட்சித் தேர்தலில் சில சபைகளில் ஆட்சியைப் பிடிப்பதற்காகவே ‘கொள்கைக் கூட்டு’என்று ஆவணத்தில் கையெழுத்துவைத்துக்கொண்டு‘சைக்கிள்’கூட்டணியோ ‘சங்கு’போய்ந்த சேர்ந்தது என்பது இப்போது தெளிவாகிவிட்டது. இது ஒரு சுயநல தேர்தல் கூட்டே தவிர, கொள்கைக்கூட்டு அல்ல என்று பல தடவைகள் இந்தப் பத்தியில் ஏற்கனவே நான் சுட்டிக்காட்டியிருக்கின்றேன். இப்போது அது அப்பழுக்கற்ற உண்மை என்பதை நிரூபித்திருக்கிறார்கள்.

சுயநல, அதிகார வெறி கொண்டு, அரசியல் நாடகமாடி தமிழ் மக்களை ஏமாற்றும் வகையில் எந்தவொரு ஆவணத்திலும் கையெழுத்திடுவதற்கு ‘சங்கு’கூட்டணியினர் வெட்கம், மானம், சூடு, சுரணையின்றித் தயாராவார்கள் என்பதை அவர்கள் ஏற்கனவே நிரூபித்தவர்கள்தான். தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பு என்ற பெயரில் ஒரு பரபரப்புக் கிளப்பப்பட்டபோதும்இப்படியொருஆவணத்தில் அவர்கள் கையெழுத்திட்டுவிட்டு சில மாதங்களிலேயெஅதைத்தூக்கியெறிந்துவிட்டு நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டார்கள் என்பது தெரிந்தேதான் ‘சைக்கிள்’கூட்டணியும் ‘சங்கு’கூட்டணியோடு இணைந்து ‘கொள்கை ஒப்பந்தம்’செய்தது. அதனால் அவர்களும் சந்தர்ப்பவாதிகளே தவிர கொள்கைவாதிகள் அல்லர் என்பதை நிரூபித்தார்கள். அதனால் ‘சங்கு’அடுத்த சந்தர்ப்பத்திலேயே தங்களைவிட்டுத் தாவிவிடும் என்பதை அவர்களும் அறியாதவர்களல்லர். ஒரேயொரு முன்னேற்றம் என்னவென்றால் இம்முறை தாவப் போகின்றோம் என்று ‘சைக்கிள்’கூட்டணிக்குச் சொல்லிவிட்டு ‘சங்கு’கூட்டணி தாவியிருப்பதுதான்.

சரி, அது போகட்டும், தாவி வந்திருக்கும் ‘சங்கு’கூட்டணிக்கும் வீட்டுக்குமான நேற்றைய சந்திப்பில் பேசப்பட்ட விடயங்களில் முக்கியமானவை முன்பக்கத்தில் தலைப்புச் செய்தியாகவந்திருக்கின்றன. எனவேஅவற்றை நான் இங்கு மீண்டும் விவரிக்கவில்லை.

நேற்றைய சந்திப்பிற்கு தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் தலைவர் சிவஞானம், செயலாளர் சுமந்திரன், கிழக்கிலிருந்து துரைராஜசிங்கம் ஆகியோரும் புளொட் சார்பில் சித்தார்த்தன், ஈபிஆர்எல்எவ் சார்பில் சுரேஸ் பிரேமச்சந்திரன், ஜனநாயகப் போராளிகள் கட்சி சார்பில் வேந்தன், சமத்துவக் கட்சி சார்பில் சந்திரகுமார், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் செயலாளரான குரு எனப்படும் ரட்ணலிங்கம் ஆகியோரும் கலந்துகொண்டனர். இவர்களுடன் ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதனும் சந்திப்புக்கு வந்திருந்தார். அவரது திடீர் வருகை ஏனைய தலைவர்களை தர்மசங்கடத்திற்குள்ளாக்கியது என்று தெரியவந்தது. முன்னதாகச் சந்திப்புக்கு அவர் வரமாட்டார் அவருக்குப் பதிலாக ரெலோவின் உபதலைவர் ஹென்றி மகேந்திரனே பங்கேற்பார் என்று தமிழ் அரசுக் கட்சிக்குச் சொல்லப்பட்டிருந்தது. ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியினரேகூட ஹென்றிதான் சந்திப்புக்கு வருவார் என்றே எதிர்பார்த்திருந்தனர். ஆனால், திடீரென ‘ஸ்போர்ட் ஷூ’ வும் போர்டுக்கொண்டு மைனர் மாப்பிள்ளை போன்று செல்வம் அடைக்கலநாதன் வந்திறங்கியதும் ஏனையவர்கள் என்ன செய்வது என்று தெரியாது கடும் தர்மசங்கடத்திற்குள்ளாகினர் என்று அறியமுடிந்தது.

செல்வத்தின் மீது அவரது கட்சிக்குள்ளேயே பாலியல் குற்றச்சாட்டு உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ள நிலையில், ஒக்டோபர் 9 நடந்த ரெலோவின் தலைமைக் குழுக் கூட்டத்தில் இனிமேல் தான் கட்சியின் தலைவராக எந்தவொரு கூட்டத்திற்கும் சந்திப்புக்கும் செல்லமாட்டேன் என்று செல்வம் உறுதியளித்திருந்தார். இந்த விடயத்தையும் கட்சியின் தலைமைக் குழுவைச் சேர்ந்த உறுப்பினர்கள் சிலர் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர்களை நேரில் சந்தித்தும் தெரிவித்திருந்தனர். தலைமைக் குழுக் கூட்டம் உட்பட கட்சியின் எந்தவொரு கூட்டமும் சந்திப்பும் இனிமேல் உபதலைவர் ஹென்றி தலைமையில்தான் நடக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டு, அந்தக் கூட்டமே ஹென்றி தலைமையில்தான் நடத்தப்பட்ட பின்னரும், அதன் பின்னர் மூன்று தடவைகள் ‘சூம்’மூலம் கூட்டப்பட்ட தலைமைக் குழுக் கூட்டங்களுக்கு ஹென்றிதான் தலைமை வகித்தார் என்றபோதும், தான் வழங்கிய வாக்குறுதியைமீறிஹென்றிக்குஅறிவிக்காமல் தானே கூட்டத்தில் கலந்துகொண்டார் செல்வம் என்று ரெலோ தலைமைக் குழுவினர் இப்போது குமுறுகின்றனர்.

இந்த நிலையில், செல்வத்தை கூட்டத்திற்கு எதிர்பார்க்காத மற்றைய தலைவர்கள் அவர் மீதான குற்றச்சாட்டுக்கள் அவரது கட்சிப் பிரச்சினை என்கிற வகையில் அணுகி (அந்த அணுகுமுறையே தவறு அது மக்களுக்குச் செய்யப்படும் மாபெரும் துரோகம் என்பது என்கருத்து) அது பற்றிப் பேசுவது நாகரீகம் இல்லை என்பதால் எதுவும் பேசவில்லை. அதற்குப் பதிலாக, அரசுத் தலைவர் அநுரகுமார இரவு பகல் பாராது மக்களுக்காகப் பாடுபடுகின்றார் என்றெல்லாம் நாடாளுமன்றத்தில் பாராட்டுப் பத்திரம் படிக்கிறீர்களே என்று அவரைக் கிண்டலடித்தனர். அதற்கு, தமிழ் மக்கள் அப்படி நினைக்கிறார்கள் அதைத்தான் சொன்னேன் என்று சமாளித்தாராம்.

இது தவிர, கூட்டத்தில் முக்கியமாக ஆராயப்பட்ட மற்றொரு விடயம். ‘ஏக்கிய ராஜ்ஜிய‘. மீண்டும் ‘ஏக்கிய ராஜ்ஜி’அரசமைப்பைக் கொண்டு வருவதற்கே தமிழ் அரசுக் கட்சி முயற்சி செய்கிறது, அரசுத் தலைவருடனான சந்திப்பிலும் அதைத்தான் அந்தக் கட்சி வலியுறுத்தியது என்று கஜேந்திரகுமார் சொல்லிவரும் நிலையில் அது பற்றி தமிழ் அரசுக் கட்சியின் செயலாளர்சுமந்திரன்நீண்டவிளக்கமளித்தார். முன்னைய அரசமைப்பில் இருந்த ‘ஏக்கிய ரஜய’என்பதற்கும் புதிய அரசமைப்பில் கொண்டு வருவதற்கு முயற்சிக்கப்பட்ட ‘ஏக்கிய ராஜ்ஜிய’என்பதற்கும் இடையிலான வேறுபாட்டை அவர் விளக்கினார். ‘ஏக்கிய ராஜ்ஜிய’என்ற சொல் முன்பிருந்த சொல்லோடு பெரிதும் இணங்கிப் போவது போன்று தோன்றினாலும் புதிய சொல்லிற்கான விளக்கமும் அதன் கிழேயே அரசமைப்பில் சேர்க்கப்பட்டதன் மூலம் அதற்கு வேறு பொருள்கோடல்கள் செய்யப்படமுடியாத நிலை ஏற்படுத்தப்பட்டது என்பதையும் விளக்கினார்.

கூட்டத்திலிருந்த ஒரு சிலர் அந்த விளக்கத்தைஅப்போதுதான்முதல்முறையாகக் கேட்பதைப் போன்று நடந்துகொண்டனர் என்றும்அறியமுடிந்தது. அதன்மூலம்தாங்கள் ஓரளவு தெளிவு பெற்றுள்ளதாக அவர்கள் காட்டிக்கொண்டார்கள் என்றும் எனக்குக் கூறப்பட்டது. ஆனால் அதையெல்லாம் நம்ப நான் தயாரில்லை. இங்கொன்றும் அங்கொன்றுமாக சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு நடிப்பதில் அவர்கள் வல்லவர்கள் என்பது ஒட்டு மொத்தத் தமிழ் மக்களுக்குமே நன்கு தெரியும்.

புதிய அரசமைப்புத் தொடர்பில் கோட்டாபய காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் வழங்கப்பட்ட வரைவு தொடர்பிலும் சுமந்திரன் கூட்டத்தில் விளக்கினார். அந்த ஆவணம் தயாரிக்கப்பட்டு இப்போது 5 வருடங்கள் கடந்துவிட்ட நிலையிலும், தற்போது அரசியல் நிலமைகள் பல்வேறு மாற்றங்களுக்கு உள்ளாகியிருக்கும் நிலையிலும் அதில் தேவைக்கேற்ற மாற்றங்களைச் செய்து புதிய ஆவணம் ஒன்றைத் தயாரிப்பது தொடர்பில் ஆராயலாம் என்று பேசப்பட்டது. அந்த ஆவணத்தில் கையெழுத்திட்டவர்கள் அப்போதைய தலைவர் சம்பந்தன், மாவை சேனாதிராசா, சித்தார்த்தன், அடைக்கலநாதன் ஆகியோர்தான். அவர்களில் சம்பந்தனும் மாவையும் மறைந்துவிட்டனர் என்பதால் சித்தார்த்தனும் அடைக்கலநாதனுமே இப்போதும் இருப்பவர்கள் என்பதையும் சுமந்திரன் ஞாபகப்படுத்தினார். அந்த ஆவணத்தைத் தான் பார்த்ததில்லை என்று சுரேஸ் சுட்டிக்காட்டினார். உடனே அவருக்கு ஒரு பிரதி தருவதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்று சுமந்திரன் உறுதியளித்தார்.

கூட்டம் தொடங்கியபோதே தமிழ் அரசுக் கட்சித் தலைவர் ஒரு விடயத்தை ஆணித்தரமாக முன்வைத்தார். கடந்த காலத்தை விட்டுவிடுவோம், நடந்தவைகள் என்னவாகவும் இருக்கட்டும், அவை பற்றி இனி விவாதித்துப் பயனில்லை, அதனால் இனி என்ன செய்வது என்பது தொடர்பில் ஆக்கபூர்வமாகச் சிந்தித்துச் செயற்படுவோம் என்றார் அவர். அத்தோடு யாழ்ப்பாணம் மாநகர சபையைப் போன்றே வடக்கில் உள்ள எல்லா உள்ளூராட்சி சபைகளிலும் இனிமேல் தமிழ் அரசுக் கட்சிக்கு ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியும் அதுபோன்றே ஜனநாயகக் கூட்டணி அதிகாரத்தை வைத்திருக்கும் இடங்களில் தமிழ் அரசுக் கட்சியும் ஆதரவு வழங்கி ஒத்துழைத்துச் செயற்படவேண்டும் என்பதையும் வலியுறுத்தினார்.

அது தொடர்பில் யாரும் எதுவும் மாற்றுக் கருத்துக்கள் தெரிவிக்காத காரணத்தால் அதுவுமொரு எழுதப்படாத இணக்கமாகவே கொள்ளப்பட்டது.

இடிமின்னல்
(idiminnal@gmail.com)

## 2 விடயங்களில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அலுவலகத்திற்கு நேற்று வந்திருந்த ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் தலைவர்கள் எதிர்கால அரசியல் தொடர்பில் ஆராய்ந்தனர். இந்தக் கூட்டத்தில், மாகாண சபைத் தேர்தலை நடத்தவேண்டும் என்று ஆளும்தரப்புக்கு அழுத்தம் கொடுப்பதில் இணைந்து, ஒருமித்துச் செயற்படுவதற்கான இணக்கம் எட்டப்பட்டது.

அத்தோடு, தமிழ் மக்களுக்கான தீர்வு தொடர்பில் புதிய அரசமைப்பு முயற்சிகளை மேற்கொள்ள ஆளும்தரப்புத் தயாராகி வரும் நிலையில், அதற்கான முன்மொழிவுகளைத் தரும் வகையில் பொது ஆவணம் ஒன்றை முன்வைப்பதற்கான கலந்துரையாடல்களில் ஈடுபடுவது என்றும் இரு தரப்புக்களும் இணங்கிக் கொண்டன. கோட்டாபய ராஜபக்ச அரசுத்தலைவராக இருந்த காலத்தில் அவரால் நியமிக்கப்பட்ட அரசமைப்பு முயற்சிக்கான குழுவில் முன்வைத்த ஆவணத்தை அடியொட்டி இந்தக்கலந்துரையாடல்களை முன்னெடுப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நேற்றைய சந்திப்புக் குறித்து தமிழ் அரசுக் கட்சியின் செயலாளர் சுமந்திரன் தெரிவித்ததாவது:

தற்போதைய சூழலில் தமிழ் மக்கள் எதிர்கொள்கின்ற சவால்களை எப்படி நாங்கள் முகம் கொடுப்பது மற்றும் முக்கியமான விடயங்களில்இணைந்துசெயற்படுவதுஎன்பது பற்றி நீண்ட கலந்துரையாடலொன்றை நாம் நடத்தினோம். இரண்டுமுக்கியவிடயங்களைப் பேசினோம். முதலாவது, மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படாமல் பிற்போடப்படும் சூழ்நிலையில், அதிகாரப் பகிர்வை கோரும் நாங்கள் அதனை விட்டுக் கொண்டு செல்ல முடியாது. மிக விரைவில் மாகாணங்களுக்கு தெரிவு செய்யப்படும் மக்கள் பிரதிநிதிகளின் கைகளிலே அரசியல் அதிகாரம் போய்ச் சேரவேண்டும். அதற்காக மாகாண சபைத் தேர்தல்விரைவாகநடத்தப்படவேண்டும்என்ற அழுத்தத்தை நாங்கள் சேர்ந்து கொடுப்பதாகத் தீர்மானமாக எடுத்திருக்கின்றோம். இந்த விவகாரத்தில் இரு தரப்பினரும் செய்து கொண்டிருக்கின்ற விடயத்தை இனிமேல் சேர்ந்து செய்வதற்கான முன்னெடுப்புகளை மேற்கொள்ளவுள்ளோம்.

தமிழ் மக்களுக்கான நீதியான - நியாயமான அரசியல் தீர்வு சம்பந்தமாக நாங்கள் ஏற்கனவே சேர்ந்த தரப்புகள் என்ற ரீதியிலும் பழைய சரித்திர விடயங்கள் பலவற்றை அடைந்திருக்கின்றோம். இது தொடர்பாக ஒரு ஒருமித்த நிலைப்பாட்டை நாங்கள் வெளிக்கொண்டு வருவதற்கான தொடர்ச்சியான சந்திப்புகளை நடத்துவதற்கும் தீர்மானித்திருக்கின்றோம் - என்றார்.

இந்தச் சந்திப்புத் தொடர்பில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் இணைத் தலைவர்களில் ஒருவரும் பேச்சாளருமான சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்ததாவது:

இன்றைய காலகட்டத்தில் தமிழ் மக்களின் பிரதிநிதிகள், தமிழ் மக்களுக்கான கட்சிகள் ஒன்றுபட்டுச் செயற்படுவதன் மூலம்தான் தமிழ் மக்களின் எதிர் காலத்தைச் சரியான பாதையில் திட்டமிட்டுக் கொண்டுசெல்ல முடியும் என்ற பொதுவான கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றது. ஆகவே தமிழ் மக்கள் மத்தியில் தமிழ் மக்களுடைய உரிமைகள் தொடர்பாகப் பேசக்கூடியவர்கள் அனைவரும் ஒன்று திரண்டு செல்வதன் ஊடாகத்தான் தமிழ் மக்களுடைய இருப்பைப் பாதுகாத்து அவர்களது கைகளில் அதிகாரத்தைப் பெறுவதற்கான ஏற்பாட்டைச் செய்ய முடியும் என்பதை நம்புகின்றோம்.

அந்த அடிப்படையில் முதலாவதாக கடந்த பல காலமாக மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படவில்லை என்பதையும், அது உடனடியாக நடத்தப்பட வேண்டும் என்பதையும், அதற்கான அதிகாரங்கள் முழுமையாக வழங்கப்படவேண்டும் என்பதையும் நாம் வலியுறுத்துவோம்.

தமிழ் மக்களுக்கு நிரந்தரமான தீர்வை முன்னெடுத்துச் செல்வது தொடர்பாகவும் பல விடயங்களை நாங்கள் பேசி இருக்கின்றோம். அது பற்றி தொடர்ந்து கலந்துரையாடி எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு பொதுவான விடயத்தை முன்னெடுப்பதாக யோசித்திருக்கின்றோம். வந்திருக்கக்கூடிய ஆளும்தரப்பும்கூட வெறுமனே வாயளவில் இல்லாமல் தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வாக ஆக்கபூர்வமான விடயங்களைக் கொண்டுவரவேண்டும். அதனைவிடுத்து வடக்கு, கிழக்குதமிழ்மக்கள் தங்களைத்தெரிவுசெய்திருக்கின்றார்கள்என்ற காரணத்துக்காக தாங்கள் விரும்பியவாறு அவர்கள் செயற்படுவது ஏற்புடையதல்ல. அந்தவகையில் தமிழ் மக்களுடைய அதிகாரங்களைப் பெற்றுக்கொள்வதற்கான அடிப்படையில் நாங்கள் ஒருமித்து பொது விடயங்களில்ஐக்கியப்பட்டுச்செயற்படுவதற்குத் தீர்மானித்துள் ளோம்.

எங்களுடன் பேச முற்படுகின்ற ஏனைய தரப்புகளுடனும் இது தொடர்பாக நாங்கள் பேசுவதற்குத் தயாராக இருக்கின்றோம். மாகாண சபைத் தேர்தலை வைக்கச்சொல்லி அதற்கான அழுத்தங்களைக் கொடுப்பதுதான் இன்றைய காலகட்டத்தின் நோக்கம். தேர்தல் வருமோ, வராதோ தெரியாது. தமிழ் மக்கள் சார்பில் தேர்தலை வைக்குமாறு அழுத்தம் கொடுப்போம். மாகாண சபைத் தேர்தலை வையுங்கள்என்பதுஎமதுநிலைப்பாடு. தேர்தல் வரும்போது தேர்தல் கூட்டணி தொடர்பாக முடிவெடுக்கப்படும். கஜேந்திரகுமார் தரப்புடன் ஏற்கனவே ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி பேசி வருகின்றது. அதேவேளை, தமிழ் அரசுக் கட்சியும் அவர்களுடன் பேச அழைப்பு விடுத்துள்ளது - என்றார்.

## உண்ணத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுகாதார பரிசோதகருக்கு அறிவிக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். அவ்வாறில்லை எனில் சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் இடர் முகாமைத்துவப் பிரிவின் 24 மணி நேர அவசர அழைப்பு எண் 1926 ஐ தொடர்புகொள்ளுமாறும் பொதுமக்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

## மனிதம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மறுநாள் மதியம், ஹெலிகாப்டர் மூலம் அவர்கள் மீட்கப்பட்டனர். அப்போது, அவரது கையில் இருந்த பை வெள்ளத்தில் விழுந்து காணாமல் போனது. பக்கத்து வீட்டுக்காரரின் தோட்டத்தில் உள்ள வேலியில் சிக்கிய பை சிக்கிக்கொண்டிருந்த நிலையில் அதனைக் கண்டெடுத்த பக்கத்து வீட்டுக்காரர் அது சுஜித்தினுடையது என்பதைக் கண்டறிந்து அவரிடமே ஒப்படைத்துள்ளார்.

## பேரிடர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆளும்தரப்பின் உதவிகளைப் பெற்றுக்கொடுப்பது தொடர்பில் கருத்து தெரிவிக்கையிலேயே இதனைத் தெரிவித்தார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆளும்தரப்பு தேர்தல் காலத்தில் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகள் போல் அல்லாமல், பேரிடரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்குவதாக வாக்குறுதியளித்த அனைத்து உதவிகள்மற்றும்நட்டஈடுகளையும்மக்களுக்கு

தொடர்ச்சி 6ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

# தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு ஆளும்தரப்பு தீர்வைத் தரவில்லை

## மன்னார் ஆயர் ஞானப்பிரகாசம் குற்றச்சாட்டு

அரசியல் கைதிகளின் விடுதலை, இறுதிப் போரில் நடைபெற்ற மனித உரிமை மீறல்களுக்கான பக்கச் சார்பற்ற சர்வதேச விசாரணை, தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு போன்ற விடயங்களில் இதுவரை ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை ஆளும்தரப்பு மேற்கொள்ளவில்லை என்று மன்னார் மறைமாவட்ட ஆயர் ஞானப்பிரகாசம் குற்றஞ்சாட்டியுள்ளார்.

மன்னார் ஆயர் தனது மறை மாவட்ட இறைமக்களுக்கு எழுதும், திரு வருகைக் காலத் திருமடல் - 2025 இல் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார். புதிய அரசு ஊழல்களை ஒழிக்கவும், போதைவஸ்தைக் கட்டுப்படுத்தவும், பொருளாதாரத்தை உறுதியாக்கவும் எடுக்கும் முயற்சிகள் பாராட்டுக்குரியன. ஆயினும் தமிழர் நில அபகரிப்பு, அரசியல் கைதிகளின் விடுதலை, இறுதிப் போரில் நடைபெற்ற மனித உரிமை மீறல்களுக்கான பக்கச்சார்பற்ற சர்வதேச விசாரணை, தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு போன்ற விடயங்களில் இந்த அரசு இதுவரை ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்பது கவலைக்குரிய விடயம் என்று அவர் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

மன்னார் மறை மாவட்டத்தில் காற்றாலைகளை அமைக்கும் திட்டமும் கனிய மணல் அகழ்வு திட்டமும் பெரும் பிரச்சினைகளாக உள்ளன. மன்னார் தீவில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள 30 காற்றாடிகளோடு மேலும் 14 காற்றாடிகள் அமைப்பதற்கான அனுமதியை ஆளும்தரப்பு வழங்கியுள்ளது. ஆயினும் இனிவரும் காலங்களில் மேலதிகமாக காற்றாடிகள் அமைக்கப்படமாட்டாது என்ற உறுதிப்பாட்டை அமைச்சரவைத் தீர்மானமாக நிறைவேற்றித் தந்துள்ளது. எனவே இதனை முன்னிட்டு மன்னாரில் இடம் பெற்றுவந்த மக்களின் தொடர் போராட்டம் முடிவுக்கு வந்துள்ளது. கனிய மணல் அகழ்வு மன்னார் தீவில் முற்றாக இடம்பெறாது என்ற வாக்குறுதியையும் அரசு தந்திருக்கின்றது. கனிய மண் அகழ்வுக்கு நிறுவனங்களின் அலுவலகங்கள் மன்னாரில் இயங்க முடியாது எனவும், கனிய மணல் அகழ்வு ஒருபோதும் நடைபெறாது எனவும் அமைச்சரவைத் தீர்மானம் நிறைவேற்றவும் வாக்குறுதி தரப்பட்டுள்ளது. அரசு மக்களுக்கு கொடுத்த இந்த வாக்குறுதியை தவறாமல் நிறைவேற்றும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

வரலாறு காணாத - முழு இலங்கை நாட்டையும் உலுக்கிய வெள்ளப் பேரிடர் நம்முடைய மறைமாவட்டத்தையும் வெகுவாகப் பாதித்துள்ளது. நம் மக்களில் சிலர் தம் இன்னுயிரை இழந்துள்ளனர். பலர் அகதிகளாக்கப்பட்டு தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். வெள்ளநீர் வீடுகளுக்குள் புகுந்து எண்ணில்லாத பொருட்சேதத்தை ஏற்படுத்தியுள்ளது. ஏராளமான விளைநிலங்கள் அழிவுக்குள்ளாகி உள்ளன. கால்நடைகள் பல இறந்துள்ளன. இந்நிலையில் நிவாரண நடவடிக்கைகள் அரசினாலும் நம் மறை மாவட்ட திருச்சபையாலும் ஏனைய சில பொது அமைப்புகளாலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பாதிப்புக்கு உள்ளாகாத மக்கள் பெருந்தனமையோடு உதவிக்கரம் நீட்டி, பாதிக்கப்பட்ட மக்களின் துயர் துடைக்க முன் வர வேண்டும்.

இன்றைய சூழ்நிலை - பெரும்பான்மை வாக்குகளை பெற்று ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்துள்ள புதிய அரசு ஊழல்களை ஒழிக்கவும், போதை வஸ்தைக் கட்டுப்படுத்தவும், பொருளாதாரத்தை உறுதியாக்கவும் எடுக்கும் முயற்சிகள் பாராட்டுக்குரியன. ஆயினும் தமிழர் நில அபகரிப்பு, அரசியல் கைதிகளின் விடுதலை, இறுதிப் போரில் நடைபெற்ற மனித உரிமை மீறல் களுக்கான பக்கச் சார்பற்ற சர்வதேச விசாரணை, தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு போன்ற விடயங்களில் இந்த அரசு இதுவரை ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்பது கவலைக்குரிய விடயமாகும். எனவே இந்தச் சூழ்நிலையில் தமிழர் நலன் சார்ந்துள்ள தமிழ் அரசியல் கட்சிகளும் ஏனைய அமைப்புக்களும் ஒற்றுமையுடன் செயல்பட்டு தமிழ் மக்களின் உரிமைகளை நிலைநாட்ட தொடர்ந்து பற்றுறுதியோடு ஒன்றுபட்டு உழைக்கவேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.- என்றுள்ளது.

இந்த இறை மடலானது இன்று ஞாயிற்றுக்கிழமை மன்னார் மறை மாவட்டத்தில் உள்ள ஆலயங்களில் காலை திருப்பலியின் போது மக்களுக்கு வாசிக்கப்பட்டது

## உதவி என்ற பெயரில் மோசடி

இத்தாலியில் உள்ள ஒரு சமூக சேவகர் இலங்கையில் இடம்பெயர்ந்தவர்களுக்கு உதவி வழங்குவார் எனக்கூறி கிட்டத்தட்ட 2.5 மில்லியன் ரூபாய் (6,500 யூரோக்கள்) மோசடி செய்ததாக இத்தாலிய நன்கொடையாளர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இடம்பெயர்ந்தவர்களுக்கு உதவி வழங்குவதற்காகப் பொருட்களைக் கொள்வனவு செய்தார் எனக்கூறி அந்தச் சமூக சேவகர் சமர்ப்பித்த விலைப்பட்டியல்களை ஆராயும்போது, அதில் குறிப்பிடப்பட்டுள்ள பெயர்களைக் கொண்ட உணவகங்கள் மற்றும் கடைகள் எதுவும் இலங்கையில் இல்லை என்றும் அவர்கள் கூறுகிறார்கள்.

இலங்கையின் பல்வேறு பகுதிகளில் வசிக்கும் ஏராளமான மக்களும், உலகின் பல்வேறு நாடுகளில் வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்களும் ஒன்றிணைந்து பேரிடரால் பாதிக்கப்பட்ட சக மக்களுக்கு உதவி வழங்க பெரும் முயற்சி மேற்கொண்டுள்ளனர்.

இலங்கையில் இடம்பெயர்ந்தவர்களுக்கு உதவி வழங்குவதற்காக தங்கள் கணக்குகளுக்குப் பணத்தை மாற்றுமாறு கேட்டு சில சமூக ஊடக ஆர்வலர்கள் விளம்பரங்களை வெளியிட்டிருந்தனர்.

இத்தாலியின் நேபிள்ஸில் வசிக்கும் ஒரு சமூக ஊடக ஆர்வலர், போலி ஆவணங்கள் மற்றும் போலி பில்களைப் பயன்படுத்தி 6,500 யூரோக்கள் அல்லது 2.5 மில்லியன் ரூபாய்க்கு மேல் மோசடி செய்துள்ளார் என்று பாதிக்கப்பட்டவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.




காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## உணவுப் பாதுகாப்பின் அவசியம்

'தித்வா' புயல் பல மாகாணங்களில் மாபெரும் அழிவை ஏற்படுத்தி நாடு முழுவதும் மனித வாழ்வையும் பொருளாதாரத்தையும் அதிர்ச்சியடையச் செய்தது. புயல் கடந்துவிட்டபோதும் அதன் விளைவுகள் நாளாந்த வாழ்க்கையை இன்னும் சீர்குலைத்துக் கொண்டிருக்கின்றன.

இந்த சூழலில் மிக அவசரமாக முன்வந்துள்ள விடயம் உணவுப் பாதுகாப்பின் எதிர்காலம். மக்கள் இடம்பெயர்ந்தோருக்கு அவசர உணவுகள், உலர் உணவுப் பொட்டலங்கள், அடிப்படைத் தேவைகள் போன்ற உதவிகளை வழங்கி வருகின்றனர். இந்த இரக்கமும் ஒற்றுமையும் உண்மையில் பாராட்டத்தக்கது. அவர்கள் செலவழித்த உழைப்பு, வளம் மற்றும் மனதளவான கருணை பல குடும்பங்களை இக்கடினமான நாட்களில் தாங்கி நிறுத்தியுள்ளது.

ஆனால் ஒருங்கிணைப்பின்மையின் காரணமாக யாரும் நினைக்காத பிரச்சினைகள் உருவாகிக்கொண்டிருக்கின்றன. சில குழுக்கள் தங்குமிடங்களுக்கு சென்றபோது அங்குள்ள மக்களுக்கு அந்த நாளில் பலமுறை உணவு வழங்கப்பட்டிருப்பது தெரிகிறது. அதேநேரத்தில் சமமான தேவை கொண்ட பிற இடங்கள் கவனத்திற்கு வராமல் போவதும் நடக்கின்றது. தானங்கள் எங்கே செலுத்தப்படவேண்டும், எங்கே விநியோகம் அவசியம் என்பதற்கான தெளிவான முறையில்லாமல் உணவு விரயமாகவோ அல்லது பயன்படுத்தப்படாமலோ போகும் அபாயம் கவனிக்கப்படவேண்டியிருக்கிறது. இந்த விடயத்தில் மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்கள் தங்களோடு தொடர்புகொண்டு உணவுகளை வழங்கும்படி அறிவுறுத்தியுள்ளன. ஆனால், பெரும்பாலான தன்னார்வலர்களும் உதவியாளர்களும் அதனைப் புறக்கணிக்கின்றனர். தற்போது தொடர்பு வலையமைப்புகள் மீண்டும் செயல்பாட்டில் உள்ள நிலையில், அதிகாரிகள் இதனைத் தொடர்ந்தும் அனுமதிக்கக் கூடாது. துல்லியமான வழிகாட்டுதல்கள், தேவைகளின் புதுப்பிக்கப்பட்ட பட்டியல், அடையாளப்படுத்தப்பட்ட விநியோக மையங்கள் ஆகியவை அரசு மற்றும் தன்னார்வக் குழுக்களுக்கு வழிகாட்ட வேண்டியது அவசியம்.

உணவு பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகள் மேலும் தீவிரமாக உள்ளன. நெரிசலான தங்குமிடங்கள், குறைந்த வசதிகள் மற்றும் கணிக்க முடியாத சூழல்கள் உணவு மாசுபடும் அபாயத்தை உயர்த்துகின்றன. தவறான கையாள்வு, பாதுகாப்பற்ற பொருட்கள், சுகாதாரமற்ற சமையல் சூழல்கள் ஆகியவை ஏற்கனவே மனஅழுத்தத்தாலும் காய்ச்சலாலும் பாதிக்கப்பட்ட மக்களில் உடல் நலக்கேடுகளை உருவாக்கும். கனிவுடன் வழங்கப்படும் உதவி, பாதுகாப்பையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். சமையல் மற்றும் விநியோகம் தொடர்பான தன்னார்வலர்களுக்கு சுகாதார நெறிமுறைகள், சேமிப்பு முறைகள் மற்றும் சுத்தமான நடைமுறைகள் குறித்து முறையாகப் பயிற்சி அளிக்கப்படவேண்டும்.

இந்த அவசரநிலை ஒரு பண்டிகைக் காலத்தோடு ஒட்டி வருகின்றது. நாடு முழுவதும் குடும்பங்கள் இயேசுவின் பிறப்பு மற்றும் புத்தாண்டு விழாக்களுக்கு இயன்றவரை தயாராகிக்கொண்டிருக்கின்றனர். அதுவரவேற்கப்படவேண்டியதும்கூட. ஆடம்பரம் இல்லாது மக்கள் விழாக்களைக் கொண்டாடுவதன் மூலம் நம்பிக்கையும் இயல்பான வாழ்வும் பாதுகாக்கப்படுகின்றன. ஆகவே சந்தைத் தேவைகளை கணக்கில் கொள்ளாமல் இருக்க முடியாது.

உள்ளூர் சந்தைகளில் எது எவ்வளவு இருப்பில் உள்ளது, எது குறைவாக உள்ளது, எதை இறக்குமதி செய்ய வேண்டியுள்ளது என்பதனை துல்லியமாக மதிப்பிட வேண்டியது அரசின் பொறுப்பு. வெள்ளப் பேரழிவில் பல பயிர்கள் முழுமையாக அழிந்துள்ளன. மழை தொடர்ந்தால் மீதமுள்ள பயிர்களும் பாதிக்கப்படும். இதற்கு நடுவில் இறக்குமதி முடிவுகள் தாமதமானால் விலைகள் ஆபத்தான அளவில் உயரும்; அதற்கான சுமையை பொதுமக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டியதாகிவிடும்.

அரசுத் தலைவர் விவசாயிகளுக்கு விரைவில் இழப்பீடு வழங்கவேண்டும் என்று அறிவுறுத்தியிருப்பது ஒரு முக்கியமான படியாகும். ஆனால் அது மட்டுமே விவசாயத்தை மீண்டும் உயிர்ப்பிக்க முடியாது. சேதமடைந்த நிலங்கள், அழிந்த பாசன அமைப்புகள், நீர்த்தேக்கத்தில் குவிந்த மண் ஆகியவற்றை திருத்துவதற்கு காலமும் நிபுணத்துவமும் அவசியம். சம்பந்தப்பட்ட விவசாய அமைப்புகள் உடனடியாக ஆலோசனைக் கூட்டங்களை ஏற்பாடு செய்து, நெறிப்படுத்தப்பட்ட மீட்பு திட்டங்களை உருவாக்கவேண்டும். பாதிக்கப்படாத பகுதிகளில் உடனடி பயிரிடலைத் தொடங்கவேண்டும் என்ற நுகர்வோர் குழுக்களின் பரிந்துரைகள் செயல்பாடாக மாறி, விதைகள், கருவிகள், தொழில்நுட்ப ஆதரவு மற்றும் நிதி வசதி ஆகியவற்றுடன் நடைமுறைக்கு வர வேண்டும்.

அதேநேரத்தில், மிக ஆபத்தான பகுதிகளில் வாழ்ந்தவர்கள் தங்கள் வீடுகளுக்குத் திரும்பக்கூடாது என்ற அரசின் முடிவு பல குடும்பங்களை நீண்டகால தற்காலிக தங்குமிடங்களிலேயே வைத்திருக்கிறது. இவர்கள் நீண்டகால உணவு மற்றும் ஊட்டச்சத்து நிலையை கண்காணிக்கச் சிறப்புப் பிரிவு தேவைப்படுகிறது. விநியோக சங்கிலிகள், ஊட்டச்சத்து அளவுகள், கூட்டு சமையல் மையங்களில் ஏற்படும் சுகாதார அபாயங்கள் போன்றவற்றை கண்காணிக்க ஒரு தனிப்பட்ட பணிக்குழு நியமிக்கப்பட வேண்டும்.

நாடெங்கும் இன்னும் சில பகுதிகளில் சேமிப்பில் உள்ள மற்றும் வயல்வெளிகளில் மீதமிருக்கும் பயிர்கள் உள்ளன. அவை விரைவாக அறுவடையிடப்பட்டு பாதுகாப்பாகச் சேமிக்கப்படவேண்டும். நீர் மேலாண்மை குறித்த கவனமும் அவசியம். தற்போது வெள்ளத்தைக் கட்டுப்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் எதிர்காலத்தில் பாசனக்கான நீர்க் குறைபாட்டை உருவாக்கக்கூடும். எனவே அவசர மேலாண்மையிலிருந்து விவசாயத் திட்டமிடலுக்கான மாற்றம் தொடங்கப்பட வேண்டும்.

இயன்ற இடங்களில் விவசாயிகள் தேவையான உள்ளீடுகளை தாமதமின்றி பெற வேண்டும். மானியங்கள் நேரத்தில் வழங்கப்பட வேண்டும். தனியார் துறையுடன் இணைந்து உபகரணங்கள், இயந்திரங்கள், தரமான விதைகள் வழங்கப்படலாம். ஐ.நா உணவு மற்றும் விவசாய நிறுவனம் (FAO), உலக உணவுத் திட்டம் (WFP) போன்ற சர்வதேச அமைப்புகளின் உதவி அவசரத் திட்டங்கள், ஆராய்ச்சி மற்றும் ஊட்டச்சத்து தரநிலைகளுக்குப் பெரிது பயனளிக்கும். உள்ளூர் வேளாண்மை ஆராய்ச்சி நிலையங்கள் உடனடியாக செயற்பாட்டில் ஈடுபடவேண்டும்.

முன்னெடுப்பும் திட்டமிடலும் இல்லாமல் நன்னெண்ணத்தால் மட்டுமே இலங்கையை மீட்டெடுக்க முடியாது. தற்போதைய உயிர் பாதுகாப்பையும் அடுத்த அறுவடையையும் காப்பதற்கு கட்டுப்பாடும் தொலைநோக்கும் தேவை. உணவுப் பாதுகாப்பை தேசிய முயற்சியாகக் கருதி ஒருங்கிணைந்த அணுகுமுறை எடுக்கப்பட்டால், பேரிடரிற்குப் பின்னர் இலங்கை மீண்டெழுவதற்கும், மேலும் வலிமைப் பெறுவதற்கும் தேவையான அடித்தளத்தை அமைக்க முடியும்.

# தமிழ் மக்களின் நீண்ட கால எம்.பியான இராசதுரை சென்னையில் காலமானார்

முன்னாள் இந்து கலாசார அபிவிருத்தி அமைச்சரும் நீண்ட காலம் வடக்கு கிழக்கு மக்களின் நாடாளுமன்றப் பிரதிநிதியாக இருந்தவருமான செல்லையா இராசதுரை சென்னையில் காலமானார். அவருக்கு வயது 98.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை செவ்வாய்க்கிழமை சென்னையில் நடைபெறுகின்றன. 1927ஆம் ஆண்டு ஜூலை 27 மட்டக்களப்பு நகர் புளியந்தீவில் பிறந்தவர் செல்லையா இராசதுரை.

மட்டக்களப்பு அரசடி வித்தியாலயத்தில் (தற்போது மகாஜனக் கல்லூரி) தொடக்கக் கல்வியை முடித்து, பின்னர் மெதடிஸ்த மத்திய கல்லூரியில் உயர்தரக் கல்வியை முடித்தார்.

இராசதுரை ஊடகவியலாளராக 'சுதந்திரன்' பத்திரிகையின் ஆசிரியர் குழுவில் பணியாற்றினார். இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வேட்பாளராக முதன் முதலாக தந்தை செல்வாவால் நிறுத்தப்பட்டு, மட்டக்களப்பு தொகுதியில் 1956 நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்று நாடாளுமன்றம் சென்றார்.

தொடர்ந்து மார்ச் 1960, ஜூலை 1960, 1965, 1970 தேர்தல்களிலும் போட்டியிட்டு வெற்றி பெற்றார். தமிழ் அரசுக் கட்சி தமிழர் விடுதலைக் கூட்டணியில் இணைந்ததை அடுத்து 1977 தேர்தலில் கூட்டணியின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

1979 பெப்ரவரி 10 இவர் தமிழ் அரசுக் கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்டார். இவரை ஆளும் கட்சியில் இணைப்பதற்காக 1979 பெப்ரவரி 22 அரசமைப்பில் திருத்தம் கொண்டு வரப்பட்டது. 1979 மார்ச் 7 ஜே. ஆர். ஜெயவர்தனா தலைமையிலான ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்தார். இதற்காக அவருக்கு இந்து சமய, பண்பாட்டு, தமிழ் அமுலாக்கல், பிரதேச அபிவிருத்தி அமைச்சர் பதவி வழங்கப்பட்டது.

தேர்தல் அரசியலில் இருந்து ஒதுங்கிய பின்னர் இவர் மலேசியாவுக்கான இலங்கைத் தூதுவராக நியமிக்கப்பட்டு மலேசியா சென்றார். பணியில் இருந்து இளைப்பாறிய பின்னர் புலம் பெயர்ந்து மலேசியாவில் சில காலம் வாழ்ந்து பின்னர் சென்னையில் வசித்தார்.

ஏறக்குறைய 33, வருடங்கள் நாடாளுமன்ற உறுப்பினராக வடகிழக்கில் தொடர்சியாக மக்களால் தெரிவானவர் இவர் மட்டுமே. மட்டக்களப்பு மாநகர சபையின் முதலாவது மேயரும் இவரே. 1973, செப்டம்பர், 07 யாழ்ப்பாணம் மல்லாகத்தில் இடம்பெற்ற இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மாநாட்டில் செல்லையா இராசதுரையும் அமிர்தலிங்கமும் தலைவர் பதவியைப் பெறுவதற்காகப் போட்டியிடும் நிலை உருவான வேளையில் தந்தை செல்வா தலையிட்டு இருவரையும் சாந்தப்படுத்தி, செல்லையா இராசதுரையை விட்டுக் கொடுக்க வைத்து அமிர்தலிங்கத்தைத் தலைவராக்கினார்.

1977, ஜூலை 21 நடைபெற்ற தொகுதிவாரியான தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியில் மட்டக்களப்பு இரட்டை அங்கத்தவர் தொகுதியில் இவரைத் தோற்கடிக்க கவிஞர் காசி ஆனந்தனை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியிலும், செல்லையா இராசதுரையை தமிழர் விடுதலைக் கூட்டணியிலும் போட்டியிட வைத்தபோதும் இவரே வெற்றி பெற்றார்.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைமை தமக்குத் துரோகம் செய்ததாகக் கூறிய பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து இந்து கலாசார அமைச்சர் பதவி பெற்றார்.

# அரசினது சுற்றறிக்கைகள், கடிதங்கள் மும்மொழிகளில் வருவது அவசியம்

## அமைச்சர் சந்தன அபேரத்ன தெரிவிப்பு

அரச திணைக்களங்கள் மற்றும் அலுவலகங்களினால் வெளியிடப்படும் சுற்றறிக்கைகள், கடிதங்கள் மற்றும் அறிவித்தல்கள் மும்மொழிகளிலும் வெளியிடப்பட வேண்டும் என்று உள் நாட்டலுவல்கள் அமைச்சர் சந்தன அபேரத்ன தெரிவித்துள்ளார்.

'தித்வா' புயல், மழை, வெள்ளம் என்று பேரிடர் காலப் பகுதியிலும் தனிச் சிங்கள மொழியில் மாத்திரம் அரச திணைக்களங்கள் மற்றும் அலுவலகங்களின் அறிவித்தல்கள் அனுப்படுகின்றமை தொடர்பில் ஊடகங்கள் வினவியபோதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

மத்திய, ஊவா மாகாணம் உள்ளிட்ட தமிழர்கள் செறிந்து வாழும் அனைத்துப் பகுதிகளிலும் தனிச் சிங்கள மொழியில் மாத்திரம் அறிவிப்புகள் விடுக்கப்படுகின்றமை தொடர்பில் சமூக ஆர்வலர்கள் கவலை வெளியிட்டுள்ளனர். இந்த விடயம் தொடர்பில், ஊடகங்கள், அமைச்சரைத் தொடர்பு கொண்டு வினவின.

இதற்குப் பதில் வழங்கிய அமைச்சர், மும்மொழிக் கொள்ளையைப் பின்பற்றுமாறு அனைத்து அரச அலுவலகங்களுக்கும் ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது என்று கூறியுள்ளார். எனினும், கடந்த நாட்களில் அதனைப் பின்பற்றியிருக்கவில்லை என்றால் அது குறித்து ஆராய்வதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். அத்துடன், விடயம் தொடர்பில் அமைச்சின் செயலாளருக்கு அறிவித்தல் விடுத்து உடனடி நடவடிக்கை எடுப்பதாகவும் அமைச்சர் உறுதியளித்துள்ளார். அதற்கமைய நாளை முதல் அனைத்து அரச அலுவலகங்களிலும் வெளியிடப்படும் அறிவித்தல்கள், மும்மொழிகளிலும் வெளியிடப்பட வேண்டும் என்பது தொடர்பில், தாம் பணிப்புரை விடுப்பார் எனவும் அமைச்சர் சந்தன அபேரத்ன மேலும் தெரிவித்தார்.

# பேரிடரை அலட்சியம் செய்து நடந்த ஆளும்தரப்பு மீது வழக்கு நிச்சயம்

பேரிடர் தொடர்பில் அலட்சியப் போக்குடன் செயற்பட்ட தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்புக்கு எதிராக நிச்சயம் வழக்குத் தொடுக்கப்படும் என்று முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

தற்போது தகவல்கள் திரட்டப்பட்டு வருவதாகவும், தந்திரோபாயமான முறையிலேயே வழக்குத் தொடுக்கப்படும் எனவும் அவர் கூறினார்.

'உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் முன்கூட்டியே தகவல் கிடைத்தும், உரிய நடவடிக்கை எடுக்கப்படாததாலேயே பெரும் அழிவு ஏற்பட்டது. நாட்டில் அண்மையில் ஏற்பட்ட பேரிடரின் போதும் அலட்சியப்போக்குடன் செயற்பட்டுள்ளனர். உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவத்தில் ஏற்பட்ட இழப்பை விடவும் ஆயிரம் மடங்கு இழப்பு தற்போது ஏற்பட்டுள்ளது.

பெலவத்தையில் (ஜே.வி.பி. தலைமையகம்) நிதி உள்ளது. இது இழப்பீடுக்கு வழங்கப்படவேண்டும். அமைச்சரவையும் பொறுப்புக்கூற வேண்டும். அமைச்சர்களின் நிதியும் வழங்கப்படவேண்டும். தமது தவறை ஆளும்தரப்பு ஏற்கவேண்டும். அவ்வாறு இல்லையேல்தான் நாம் சட்ட நடவடிக்கையில் இறங்குவோம். எமது சட்டத்தரணிகள் இது பற்றி ஆராய்ந்து வருகின்றனர்' - என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# ஊட்டச் சத்து 'பிஸ்கெட்டு' க்களை அனுப்பி வைத்தது ஆஸ்திரேலியா

பேரிடரால் பாதிக்கப்பட்ட மற்றும் தற்போது பாதுகாப்பு முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களின் ஊட்டச்சத்து மட்டத்தை உறுதிப்படுத்துவதற்காக, ஆஸ்திரேலிய ஆளும்தரப்பினால்10.2மெட்ரிக்தொன்மேலதிகஊட்டச்சத்துள்ள பிஸ்கட் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இலங்கையில்ஏற்பட்டபேரிடர்நிலையைக்கருத்திற்கொண்டு உலக நாடுகள் பல இலங்கைக்கு உதவிக்கரம் நீட்டியுள்ளன. அந்த வகையில் ஆவுஸ்திரேலிய உயராணையர் காரியாலயத்தின் தலையீட்டுடன், உலக உணவுத் திட்டத்துடன் இணைந்து ஆஸ்திரேலியா மேலதிக ஊட்டச்சத்து பிஸ்கட்களையும் உதவிப் பொருட்களையும் வழங்கியுள்ளது.

அதற்கமை 10.2 மெட்ரிக் தொன் எடையுள்ள முதலாவது பிஸ்கட் தொகுதியானது, நேற்றுஅதிகாலை ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் விமான சேவைக்குச் சொந்தமான விமானம் மூலம் டுபாயில் இருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தது. ஆஸ்திரேலிய ஆளும்தரப்புக்குச் சொந்தமான டுபாயில் உள்ள களஞ்சியசாலையில் இருந்து குறித்த பிஸ்கட் தொகுதி நாட்டிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் ஆஸ்ரேலிய ஆளும்தரப்பின் மேற்படி உதவித் திட்டத்தின் கீழ், 70 மெட்ரிக் தொன் பிஸ்கட்களை இலங்கைக்கு வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அவற்றின் மதிப்பு சுமார் 3.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஆகும். நேற்றைய தினம் விமான நிலையத்தை வந்தடைந்த பிஸ்கட் தொகுதியானது, மாத்தளை மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் பேரிடரால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு விநியோகிக்கப்பட உள்ளது.

# அத்தியாவசிய சேவை முறைப்பாடுகளுக்கு தனி எண் அறிமுகம்

நாடளாவிய ரீதியில் அத்தியாவசிய சேவைகளுக்கான அணுகல் தன்மை தொடர்பான முறைப்பாடுகள் மற்றும் சிரமங்களை விரைவாகத் தெரிவிப்பதற்காக, அத்தியாவசிய சேவைகளின் ஆணையாளர் நாயகம் அலுவலகம் பிரத்தியேக விரைவு அழைப்பு எண்ணொன்றை உத்தியோகபூர்வமாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கமைய பொது மக்கள் 1904 என்ற எண்ணுக்கு அழைப்பதன் மூலம் அத்தியாவசிய சேவைகள் குறித்த முறைப்பாடுகள் மற்றும் அவற்றைப் பெற்றுக் கொள்வதிலுள்ள சிரமங்கள் குறித்து அறிவிக்க முடியும்.

மின்சார வழங்கல், எரிபொருள் விநியோகம், மருத்துவமனை மற்றும் அவசரகால மருத்துவ சேவைகள், பொதுப் போக்குவரத்து மற்றும் போக்குவரத்துநிர்வாகம், நீர்வழங்கல் மற்றும் சுகாதார வசதிகள், உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்கள், தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்ப சேவைகள் குறித்துஇந்தஎண்ணுக்குஅழைத்து அறிவிக்க முடியும்.




விவசாய நீர்ப்பாசனம் மற்றும் வர்த்தமானி அறிவித்தல் இலக்கம் 24644/29 இன் கீழ் அறிவிக்கப்பட்ட பிற அத்தியாவசிய பொதுச் சேவைகள், அவசர கால சூழ்நிலைகள் அல்லது சேவைகள் தடைபடும் போது பொதுமக்களிடமிருந்து பெறப்படும் புகார்களுக்கு சரியான நேரத்தில் பதிலளிப்பதையும், சிறந்த ஒருங்கிணைப்பையும், திறமையான தீர்வையும் உறுதி செய்வதற்காக இந்த நடவடிக்கை தொடங்கப்பட்டுள்ளதாக அத்தியாவசிய சேவைகளின் ஆணையாளர் நாயகம் அலுவலகம் தெரிவித்துள்ளது.

1904 இற்கு வரும் அனைத்து அழைப்புகளும் அத்தியாவசிய சேவைகளின் ஆணையாளர் நாயகம் அலுவலகத்தின் செயற்பாட்டுப் பிரிவினால் பெறப்படும். அங்கு புகார்கள் சரிபார்க்கப்பட்டு, முன்னுரிமையளிக்கப்பட்டு, உடனடிநடவடிக்கைக்காக சம்பந்தப்பட்ட துறைசார் பதில் குழுக்களுக்கு அனுப்பப்படும். விரைவான தீர்வுக்கு வசதியாக, அனைத்து மக்களும் இந்த அவசர அழைப்பு எண்ணைப் பொறுப்புடன் பயன்படுத்துமாறும் மற்றும் சரியான தகவல்களை வழங்குமாறும் அத்தியாவசிய சேவைகளின் ஆணையாளர் நாயகம் அலுவலகம் கேட்டுக்கொண்டுள்ளது.



## பேரிடர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றுக்கொடுக்க முதன்மை எதிர்க்கட்சி என்ற வகையில் தொடர்ந்து ஆளும்தரப்புக்கு அழுத்தம் கொடுப்போம். பாதிக்கப்பட்டவர்களுக்குஎவ்வாறான தொகைகளை வழங்கப் போகிறோம் என அரசுத் தலைவர் நாடாளுமன்றத்தில் பகிரங்கமாகத் தெரிவித்திருந்தார். அது எந்தளவு தூரம் முழுமையாகக் கிடைக்கும் என்பது தெரியாது. என்றாலும் அதனைப் பெற்றுக்கொடுக்க நாங்கள் நடவடிக்கை எடுப்போம்.

அதேநேரம் இவ்வாறான பெரும் பேரிடர் ஏற்படும் என வளிமண்டலவியல் திணைக்களம் மற்றும் சர்வதேச ஊடகங்கள் இரண்டு வாரங்களுக்குமுன்னர்எதிர்வுகூறியிருந்தபோதும், அது தொடர்பில் ஆளும்தரப்பு நடவடிக்கை எடுக்கத் தவறியுள்ளது. இதனை ஆளும்தரப்பு ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆளும்தரப்பு முன்கூட்டியே இந்தப் பேரிடருக்கு முகம்கொடுக்க நடவடிக்கை எடுத்திருந்தால், அப்பாவி மக்களின் உயிர்களை பாதுகாக்க முடிந்திருக்கும். பாதிப்புகளையும்ஓரளவுகுறைத்துக்கொண்டிருக்க முடிந்திருக்கும். ஆளும்தரப்பின் இயலாமையே இதற்கு காரணமாகும்.

அதேநேரம் ஆளும்தரப்பின் இவ்வாறான நடவடிக்கைகளை சுட்டிக்காட்டி, ஊடகங்கள் கருத்து தெரிவிக்கும்போது, அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தி, அவ்வாறான ஊடக நிறுவனங்களையும் சமூக ஊடகச் செயற்பாட்டாளர்களையும் ஒதுக்குவதற்கு ஆளும்தரப்பு நடவடிக்கை எடுத்து வருகிறது. அவசர காலச் சட்டம் பேரிடரில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிங்களை பெற்றுக்கொடுக்கவே அமுல் படுத்தப்பட்டிருப்பதாக அரசுத் தலைவர் தெரிவிக்கின்றபோதும். பொலிஸுக்கு பொறுப்பானவர்கள் அவசரகால சட்டத்தை பயன்படுத்தி, ஆளும்தரப்புக்கு எதிரான கருத்துக்களை தெரிவிக்கும் சமூக ஊடகங்களை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

அத்துடன் பாதுக்கப்பட்ட மக்களுக்கு உதவிங்களை வழங்கும் நடவடிக்கையையும் ஆளும்தரப்பு அரசியலாக்கிக்கொண்டிருக்கிறது. பாதிக்கப்பட்டவர்களுக்கு தொடக்க கட்டமாக வழங்கும் 25ஆயிரம் ரூபா தொகையைப்ப பெற்றுக்கொள்ள, குறித்த ஆவணத்தில் அந்தப் பிரதேசத்தில் ஜேவிபி உறுப்பினரின் கையொப்பம் அவசியம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் உதவிப் பொருட்களை விநியோகிக்கும் விடயத்திலும், பல்வேறு பகுதிகளில் இருந்து உலர் உணவு பொருட்களை பெற்றுக்கொண்டு, சிவப்பு நட்சத்திர அடையாளம் பொறிக்கப்பட்ட ஆடை அணிந்தே இவர்கள் அந்த உதவிகளை பகிர்ந்தளிக்கின்றனர். இவ்வாறு மிகவும் கீழ் மட்ட அரசியல் - என்றார்.

## பேரிடரால்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

**பாதிப்புக்கள்**

நவம்பர் 21 முதல் நேற்று இரவு வரையான காலப்பகுதியில் 'தித்வா'புயலால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை21இலட்சத்தைக்கடந்துள்ளதாகஇடர் முகாமைத்துவமத்தியநிலையம்தெரிவித்துள்ளது. இதேவேளை 627 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் 190 பேர் காணாமல் போனோர் பட்டியலிலேயே உள்ளனர். அதிகளவான உயிரிழப்புக்கள் கண்டி மாவட்டத்திலேயே பதிவாகியுள்ளன. இம்மாவட்டத்தில் மாத்திரம் 232 பேர் உயிரிழந்துள்ளதோடு, மேலும் 81 பேர் காணாமல் போயுள்ளனர். அடுத்ததாக பதுளையில் 90 பேர் உயிரிழந்துள்ளதோடு, 11 பேர் காணாமல் போயுள்ளனர். நுவரெலியா மாவட்டத்தில் 89 பேர் உயிரிழந்துள்ளதோடு, 35 பேர் காணாமல் போயுள்ளனர். குருணாகலில் 61 பேர் உயிரிழந்துள்ளதோடு, 11 பேர் காணாமல் போயுள்ளனர். இதேபோன்று புத்தளம் (35), கேகாலை (32), மாத்தளை (28), கம்பஹா (13), அநுராதபுரம் (12) ஆகிய மாவட்டங்களிலும் உயிரிழப்புக்கள் பதிவாகியுள்ளன. அது மாத்திரமின்றி காலி, திருகோணமலை தவிர்ந்த ஏனைய 23 மாவட்டங்களிலும் 4 ஆயிரத்து 517 வீடுகள் முழுமையாக சேதமடைந்துள்ளன. 25 மாவட்டங்களிலும் 76 ஆயிரத்து 66 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

பாதுகாப்புமுகாம்களில்தங்கவைக்கப்பட்டிருந்த மக்கள் தற்போது படிப்படியாக அவற்றிலிருந்து வெளியேறி தமது இருப்பிடங்களில் மீளக் குடியேறத் தொடங்கியுள்ளனர். அந்த வகையில் நேற்று வரை 27 ஆயிரத்து 663 குடும்பங்களைச் சேர்ந்த 89 ஆயிரத்து 857 பேர் மாத்திரமே 956 தற்காலிக இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளர். எவ்வாறிருப்பினும் தற்போது வரை ஒட்டுமொத்தமாக 6 லட்சத்து 11 ஆயிரத்து 530 குடும்பங்களைச் சேர்ந்த 21 லட்சத்து 79 ஆயிரத்து 138 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் மேலும் தெரிவித்துள்ளது.

**காலநிலை**

நாடளாவிய ரீதியில் வடகீழ் பருவப் பெயர்ச்சி நிலைமை படிப்படியாக தாபிக்கப்பட்டு வருவதாக இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. வடக்கு, வடமத்திய, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் அவ்வப்போது மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மட்டக்களப்பு மாவட்டத்தில் சில இடங்களில் 75 மி.மீ அளவான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்ககப்படுகின்றது.

நாட்டின் ஏனைய பிரதேசங்களில் பல இடங்களில் பி.ப. 1.00 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. மேல், சப்ரகமுவ, மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் சில இடங்களில் அதிகாலை வேளையில் பனிமூட்டமான நிலை காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன்கூடியமழைபெய்யும்வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக வீசக் கூடிய பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையானமுன்னெச்சரிக்கைநடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

மழை நிலைமை : பொத்துவிலிலிருந்து மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை ஊடாக காங்கேசன்துறை வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளில் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகளில் சில இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

காற்று : நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது வடகிழக்கு திசையிலிருந்து அல்லது மாறுபட்ட திசைகளிலிருந்து வீசக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 20-30 கிலோ மீற்றர் வரை காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. சிலாபத்திலிருந்து புத்தளம் மற்றும் காங்கேசன்துறை ஊடாக முல்லைத்தீவு வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 45 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப் படுகின்றது.

கடல்நிலை: சிலாபத்திலிருந்து புத்தளம் மற்றும் காங்கோத்துறை ஊடாக முல்லைத்தீவு வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகள் அவ்வப்போது ஓஜுளவு கொந்தளிப்பாகக் காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகள் சாதாரண முதல் மிதமான அலை வரை, காணப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

## மீட்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தூதுவர் ஜூலீ சங் மற்றும் பிரதிப் பாதுகாப்பு அமைச்சரான ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் அருன ஜயசேகர ஆகியோர் வரவேற்றனர். அமெரிக்க அதிகாரிகளுடன் இணைந்து இலங்கை அதிகாரிகளும் உடனடியாகப் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு அத்தியாவசியமான உதவிப் பொருள் விநியோகங்களைத் தொடங்குவதற்கான நடவடிக்கைகளை நேற்றைய தினமே மேற்கொண்டனர்.

குவாமிலிருந்துசெயற்படும்36ஆவதுசீ.ஆர்.ஜி. மற்றும் ஏனைய பிரிவுகளைச் சேர்ந்த அமெரிக்க விமானப்படையினர், இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தினால் அடையாளம் காணப்பட்ட பகுதிகளுக்கு உடனடி போக்குவரத்து மற்றும் ஏற்பாட்டியல் உதவிகளை வழங்க நடவடிக்கை எடுத்தனர். கடேனா விமானத் தளத்திலுள்ள படைகள் உட்பட, அமெரிக்க விமானப்படையின் 374ஆவது வான் போக்குவரத்துப் பிரிவு மற்றும் அமெரிக்க மெரைன் கோர்ஸ் இன் கடற்சார் பயணப் படை என்பன உதவி செய்வதற்கான மேலதிக பிரிவுகளில் உள்ளடங்குகின்றன.

விஞ்ஞானமற்றும்தொழில்நுட்பஅமைச்சர் பேராசிரியர் கிறிஷாந்த, துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து பிரதி அமைச்சர் ஜனித்த ருவான் கொடித்துவக்கு மற்றும் இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் சம்பத் கொடுவேகொட ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இலங்கைஆளும்தரப்பினால்விடுக்கப்பட்ட கோரிக்கையினைத் தொடர்ந்து இலங்கை ஆயுதப் படைகளுடனான ஒத்துழைப்புடன் அமெரிக்கஇந்தோ-பசிபிக்கட்டளைப்பீடமானது, 'தித்வா'சூறாவளி மீட்பு நடவடிக்கைகளுக்கான வான் போக்குவரத்து மற்றும் ஏற்பாட்டியல் உதவியை வழங்குவதற்காக அமெரிக்க இராணுவவிமானத்தையும்அதிகாரிகளையும் அனுப்பி வைத்துள்ளது.

'தித்வா'புயலால் ஏற்பட்டுள்ள பேரழிவை எதிர்கொண்டுள்ள இந்தச் சவாலான நேரத்தில் அமெரிக்கா இலங்கையுடன் அசைக்க முடியாத உறுதியுடன் நிற்கிறது. மீட்பு மற்றும் மீள்கட்டமைப்பு முயற்சிகளுக்கு உதவி செய்வதில் உறுதியாக உள்ளதாக இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

## அநுராதபுரத்தின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனுராதபுரம்மாவட்டமக்களின்இயல்புவாழ்க்கையை மீளக் கட்டியெழுப்புவதற்கும், உட்கட்டமைப்பு மேம்பாட்டுக்கும் செயற்படுத்தப்பட்ட திட்டங்கள் குறித்து மீளாய்வு செய்வதற்காக நேற்று காலை அனுராதபுரம்மாவட்டசெயலகத்தில்நடைபெற்றவிசேட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் கலந்து கொண்ட போதே அரசுத் தலைவர் இந்த அறிவுறுத்தல்களை வழங்கினார்.

வெள்ளத்தால் சேதமடைந்த அனுராதபுர மாவட்டத்தில் பெரும் போகத்தில் நெற் பயிற்செய்கை மேற்கொள்வதற்கு தயார்படுத்துமாறு இதன்போது அரசுத்தலைவர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார். தேசியத்தேவையாகக்கருதி, அனைத்துதொடர்புடைய நிறுவனங்களும் நன்கு ஒருங்கிணைந்த முறையில் அதற்குதங்களைஅர்ப்பணித்துக்கொள்ளவேண்டியது அவசியமாகும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

விவசாயிகளுக்கு உடனடியாக இழப்பீடு வழங்கவும், தற்காலிக பழுதுபார்ப்புகளை மேற்கொண்டு தேவையான நீர்ப்பாசன நீர் விநியோகத்தை வழங்கவும் சம்பந்தப்பட்ட தரபபினர் நடவடிக்கை எடுக்கவேண்டும். பயிர்களுக்கு ஏற்பட்ட சேதத்துக்கு இலங்கை வரலாற்றில் மிக உயர்ந்த இழப்பீட்டை வழங்குவதன் ஊடாக பயிற்செய்கை நடவடிக்கைகளை விரைவில் மீண்டும் தொடங்க ஆளும்தரப்பு எதிர்பார்த்துள்ளது.

பேரிடரால்முழுமையாகச்சேதத்தைஎதிர்கொண்ட விவசாயிகளின்எண்ணிக்கை, விவசாயக்காணிகளின் அளவு மற்றும் தேவையான நிதி என்பன குறித்த அறிக்கையை எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்கு முன் வழங்கவேண்டும். இந்த இழப்பீட்டை நியாயமாகக் கிடைக்கவேண்டியவர்களுக்குவழங்கப்படவேண்டும் அதனை நீதியற்ற முறையில் யாரும் பெறக்கூடாது.

விவசாயிகளுக்கு இந்த இழப்பீட்டை நிச்சயமாக வழங்க ஆளும்தரப்பு நடவடிக்கை எடுக்கும். விவசாயிகளுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தவும், அவர்களை மீண்டும் பயிற்செய்கை நடவடிக்கைகளில் ஊக்குவிக்கவும் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அரசுத் தலைவர் மேலும் தெரிவித்தார்.

மாவட்டத்தில் நெடுஞ்சாலைகள், நீர்ப்பாசனம் மற்றும் தகவல் தொடர்பு உள்ளிட்ட உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்குறித்துசம்பந்தப்பட்டநிறுவனங்களிடம் அரசுத் தலைவர் தனித்தனியாகக் கேட்டறிந்தார்.

சேதமடைந்த வீதிகளை மீண்டும் திறப்பதற்கான திட்டம் குறித்து அரசுத் தலைவர் கேட்டறிந்ததோடு வீதி அபிவிருத்திக்கான நிரந்தர திட்டங்கள் செயல்படுத்தப்படும் வரை தற்காலிக சீரமைப்புப் பணிகளை விரைவுபடுத்தவும், மக்களின் போக்குவரத்துத் தேவைகளைப் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கவும் அவர் அறிவுறுத்தினார்.

மாவட்டத்தில் உள்ள 580 மின்மாற்றிகளில் 473 மின்மாற்றிகள் பேரிடர் காரணமாகச் சேதமடைந்துள்ளதாகவும், தற்போது அவை சீரமைக்கப்பட்டுவருவதாகவும், இன்றையதினத்துக்குள் மாவட்டத்தில் மின் விநியோகம் முழுமையடையும் என்றும் மின்சார சபை அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

மேலும், 49ஆயிரம்நீர்விநியோகமார்கங்களுக்குச் சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் அவற்றில் சுமார் 99 சதவீதமானவை தற்போது சீரமைக்கப்பட்டுள்ளதாவும், எஞ்சியஇடங்களுக்குபவுசர்கள்மூலம்நீர்வழங்கப்பட்டு வருவதாகவும், அடுத்த 2 நாட்களுக்குள் நீர்விநியோகம் முழுமையாகச் சீரமைக்கப்படும் என்றும் அதிகாரிகள் சுட்டிக்காட்டினர். சேதமடைந்த சமூக நீர் வழங்கல் திட்டங்கள் தற்போது மீண்டும் சீரமைக்கப்பட்டு வருவதாகவும் இங்கு தெரிவிக்கப்பட்டது.

கிணறுகளைச் சுத்தம் செய்யும் பணிகள் கடற்படையின் உதவியுடன் தற்போது நடைபெற்று வருகின்றன. பிரதேசசெயலகங்களின்ஒருங்கிணைப்பு மற்றும்சமூகத்தின்பங்களிப்புடன்பணிகளைவிரைவாக நிறைவுசெய்யுமாறும்அரசுத்தலைவர்அறிவுறுத்தினார். சோளம்மற்றும்ஏனையபயிர்களுக்கானஇழப்பீடுகளை வழங்கி பயிற்செய்கை நடவடிக்கைகளை மீண்டும் தொடங்குவது, கால்நடை வளர்க்கும் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மறுசீரமைத்தல், சுகாதார சேவைகளை மீளமைப்பது மற்றும் சேதமடைந்த மத வழிபாட்டிடங்களை அபிவிருத்தி செய்வது குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

வெள்ளம் காரணமாக மாவட்டத்தில் 228 வீடுகள் முற்றிலுமாக சேதமடைந்துள்ளன. அந்த வீடுகள் இருந்த இடங்களில் மக்கள் மீள்குடியேற்றுவதா அல்லது வேறு இடத்தில் மீள்குடியேற்றுவதா என்பது குறித்த துல்லியமான தரவுகளைப் பெற்று தேவையான காணிகளை அடையாளம் காணும் நடவடிக்கைகளைத் தொடங்குமாறும் அரசுத்தலைவர் அறிவுறுத்தினார்.

டிசெம்பர் 16 மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பாடசாலைகளை மீண்டும் திறக்க முடியுமாக இருக்கும் என்றும் அதிகாரிகள் சுட்டிக்காட்டினர். பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு திறைசேரியால் வழங்கப்பட உள்ள 15,000 ரூபாவை டிசெம்பர் 31க்கு முன்னர் வழங்கி முடிக்கவும், அதற்கான பட்டியலை உடனடியாகத் தயாரிக்கவும் அரசுத் தலைவர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். மக்களுக்கு உதவிம் வழங்குவதிலும், உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதிலும் அரச அதிகாரிகள், பொலிஸார் மற்றும் முப்படையினரின் பங்களிப்பு குறித்து அரசுத் தலைவர் இதன் போது நன்றி தெரிவித்தார்.

## தமிழ்நாட்டின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் நாட்டிலிருந்து உதவி பொருட்கள் கப்பல் ஊடாக நாட்டை வந்தடைந்தன.

இலங்கைக்கான இந்திய உயராணையர் சந்தோஷ் ஜா உள்ளிட்ட உயர்மட்ட குழுவினர் கப்பல் பணிக்குழுவினரை வரவேற்றதோடு, உதவிப் பொருட்களையும் பொறுப்பேற்றனர். இந்தியாவின் தமிழ்நாடு மாநில அரசினால் முதல்வர் ஸ்டாலின் தலைமையில் அனுப்பப்பட்ட உதவிப்பொருட்களுடன் சனிக்கிழமை சென்னை துறைமுகத்திலிருந்து புறப்பட்ட கப்பல் இலங்கையை வந்தடைந்தது. சென்னை துறைமுகத்தில் நடைபெற்ற விசேட நிகழ்வில், தமிழ்நாடு முதலமைச்சர் ஸ்டாலின் இந்த மனிதாபிமான உதவிப் பொருட்கள் ஏற்றிய கப்பலை கொடியசைத்து அனுப்பி வைத்தார்.

இந்த நிகழ்வில் தமிழ் நாட்டிற்கான இலங்கை துணைத் தூதுவர் வைத்தியர். கேதீஸ்வரன் உட்படத் தமிழ் நாட்டு அரசின் முக்கிய பிரமுகர்களும் கலந்துகொண்டிருந்தனர். உணவுப் பொருட்கள் மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் அடங்கிய மொத்தம் 950 மெட்ரிக் டொன் பொருட்கள் சென்னை மற்றும் தூத்துக்குடி துறைமுகங்களில் இருந்து கப்பல்கள் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இந்த 950 மெட்ரிக் டொன் உதவிப் பொதிகளில் பருப்பு, சீனி மற்றும் பால் மா போன்ற அத்தியாவசிய உணவுப்பொருட்கள் பெருமளவில் உள்ளடங்குகின்றன. அத்துடன், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் உடனடித் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில், 10,000 துவாய்கள், 5,000 சேலைகள், 5,000 வேட்டிகள், 10,000 படுக்கை விரிப்புகள் மற்றும் 1,000 தற்காலிக கூடாரங்கள் அமைக்கும் பொருட்கள் போன்ற அத்தியாவசியப் பொருட்களும் இந்தக் கப்பல்கள் மூலம் வந்தடைந்துள்ளன.

## முட்டை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனால் வரும் நாட்களில் முட்டை ஒன்றின் விலை 70 ரூபாவாக உயர்வடையும்என அகில இலங்கை முட்டை வர்த்தகர்கள் சங்கத்தின் தலைவர் அன்டன் அப்புஹாமி தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் நேற்று கொழும்பில் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்த அவர், மேலும் தெரிவித்ததாவது:

எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் முட்டை ஒன்றின் விலை 70 ரூபாவாக உயரும் அபாயம் உள்ளது. இந்த விலையேற்றத்திற்கான முதன்மையான காரணம் பண்ணையில் வளர்க்கப்பட்ட பெருமளவான கோழிகள் உயிரிழந்துள்ளமைதான். கடந்த சில நாட்களாக நிலவிய மோசமான வானிலையால் முழு நாடும் இயற்கை பேரிடருக்கு முகங்கொடுத்துள்ளதுடன் பெரும் வெள்ளம் காரணமாக பண்ணையில் வளர்க்கப்பட்ட சுமார் 28 இலட்சத்துக்கும் அதிக எண்ணிக்கையிலான கோழிகள் உயிரிழந்துள்ளன.

இதனால் கோழி இறைச்சி மற்றும் முட்டை உற்பத்தி கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

ஏனைய கால நடை உற்பத்திகளும் நெருக்கடிக்குள்ளாகியுள்ளன. கோழி இறைச்சியின் விலை தற்போது குறைவாக இருப்பினும், எதிர்வரும் பண்டிகைக் காலத்தின்போது கோழிகளுக்கு தட்டுப்பாடு ஏற்படக்கூடும். அத்தோடு இக்காலப்பகுதியில் கோழி இறைச்சியை உணவுக்குப் பயன்படுத்த வேண்டாம் என்ற வதந்திகளும் பரவி வருவதைக் காண முடிகிறது. எவ்வாறாயினும் நாம் வெள்ளத்தால் உயிரிழந்த கோழிகளை மனித நுகர்வுக்கு ஒருபோதும் பயன்படுத்துவதில்லை.

அத்தோடு பண்ணை விலங்கு, கால்நடை உற்பத்திக்கு சவாலாக, கால்நடை தீவனத்திற்குப் பயன்படுத்தப்படும் மூலப்பொருட்களின் விலைகள் சடுதியாக அதிகரித்துள்ளது. ஆகையால் கால்நடை உற்பத்தியாளர்கள் இந்த இக்கட்டான சூழ்நிலையைச் சமாளிப்பதற்கும், சந்தையை நிலைப்படுத்தவும் ஆளும்தரப்பு கால்நடைத் தீவன மூலப்பொருட்களை உடனடியாக இறக்குமதி செய்வது அவசியம். மேலும் இந்நேரத்தில் பாதிக்கப்பட்ட கால்நடை பண்ணை உரிமையாளர்கள் தமது உற்பத்தியை மீளக் கட்டியெழுப்ப ஆளும்தரப்பு உதவித்தொகை வழங்கவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்திருந்தார்.

# வழமைக்குத் திரும்புகிறது குடிதண்ணீர் விநியோகம்

பேரிடர் நிலைமையால் நீர் வழங்கல் கட்டமைப்புக்கு ஏற்பட்ட பாதிப்புகளில் சுமார் 90 சதவீதமானவை தற்போது வழமைக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாக வீடமைப்பு நிர்மாணத்துறை மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் சுசில் ரணசிங்க தெரிவித்தார்.

தேசிய வீடமைப்பு அமைச்சு காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னர் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பேரிடர் நிலைமை காரணமாக நீர் வழங்கல் சபைக்கு சொந்தமான 343 நீர் சுத்திகரிப்பு நிலையங்களில் 156 நிலையங்கள் செயலிழந்திருந்தன. அவற்றை சீரமைக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக கண்டி மாவட்டத்தின் நீர் வழங்கல் நடவடிக்கைகள் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், நீர் வழங்கல் ஊழியர்களின் அர்ப்பணிப்பு காரணமாக, சேதமடைந்த நீர் வழங்கல் அமைப்புகளில் சுமார் 90 சதவீதத்தை வழமைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

சேதமடைந்த வீடுகளை புனரமைப்பதற்கான பணிகள் வெகுவிரைவில் மேற்கொள்ளப்படும்.மீட்பு பணிகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுவதால் புனரமைப்பு பணிகளை முன்னெடுக்க முடியாத நிலை காணப்படுகிறது என்றார்.

# ரூ. 25 கோடி பெறுமதியான 'குஷ்' போதைப் பொருள் நேற்று சிக்கியது

## பெண்ணும் அவரது கணவரும் கைது

கட்டுநாயக்க விமான நிலையத்தில் நேற்று சுமார் 25 கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதிமிக்க குஷ் போதைப்பொருள் அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளது. அதனை எடுத்து வந்தார் என்ற குற்றச்சாட்டில் பெண் ஒருவரும் அவரது கணவரும்என இருவர்கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள், பயணிகள் வருகை முனையத்தினூடாக (கிரீன் சேனல் வழியாக) விமான நிலையத்திலிருந்து வெளியேற முற்பட்ட நிலையில் பொலிஸ் போதைப்பொருள் பணியக அதிகாரிகளால் தடுத்து நிறுத்தப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கட்டுநாயக்கவிமானநிலையத்தின்பயணிகள் வருகை முனையத்தில் வைத்து நேற்று (7) சந்தேகத்திற்கிடமான பயணி ஒருவரைத் தடுத்து நிறுத்திப் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பணியக அதிகாரிகள் சோதனையிட்டுள்ளனர். இதன்போது குறித்த பெண் பயணியின் சந்தேகத்திற்கிடமான பயணப் பொதிகளை திறந்து பார்த்து சோதனையிட்டபோது மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் பெருமளவான போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது.

பயணப் பொதியிலிருந்து சட்டவிரோதமான முறையில்நாட்டுக்குக்கொண்டுவரப்பட்ட 21கிலோ 580 கிராம் 'குஷ்' போதைப்பொருள் இவ்வாறு கைப்பற்றப்பட்டதாகசுங்கப்பிரிவுதெரிவித்துள்ளது. கைப்பற்றப்பட்ட போதைப்பொருளின் சந்தைப் பெறுமதி சுமார் 25 கோடி ரூபாவுக்கும் அதிகமென மதிப்பிடப்பட்டுள்ளது. இதன்போது சந்தேகநபரான பெண்ணை அழைத்துச் செல்வதற்கு விமான நிலையத்துக்கு வருகைதந்திருந்த அவரது கணவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட 21 வயதுடைய பெண், 30 வயதுடைய நபர் ஆகியோர் களுத்துறை தெற்குப் பகுதியைச் சேர்ந்தவர்களாவர். குறித்த சந்தேகநபர் குற்றச் செயலுக்கு உதவி ஒத்தாசை வழங்கிய குற்றத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார் என்று விசாரணை அதிகாரிகள் தெரிவித்தனர். இதேவேளை கைப்பற்றப்பட்ட போதைப்பொருள் மற்றும் கைதான சந்தேகநபர்கள் தொடர்பில் விமானநிலையபொலிஸ்போதைப்பொருள் பணியகம் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளது.




# தொடருந்து பருவச் சீட்டுக்களை பேருந்துகளில் பயன்படுத்தலாம்

## போக்குவரத்து அமைச்சர் அறிவிப்பு

நாட்டில் நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக பல பிரதேசங்களுக்கான அலுவலக தொடருந்து சேவைகள் தடைபட்டுள்ளன. எனவே இதனால் பாதிக்கப்பட்டுள்ள பயணிகளின் நலன் கருதி, தனியான்ன பேருந்து சேவைகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

கண்டியிலிருந்து கொழும்புக்கும், குருநாகலிலிருந்து கொழும்புக்கும் வேலைக்குச் செல்லும் தொடருந்துத்துக்கான மாதாந்த பருவ சீட்டு வைத்திருப்பவர்கள் (றீளழிவிலிஜ வீஷ்உவளமி கூழிலியி-எஷவி) இலங்கைப் போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்துகளில் அவற்றைப் பயன்படுத்தி பயணிக்க அனுமதிக்கப்படுவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஏற்பாடு இன்று திங்கட்கிழமை முதல் நடைமுறைக்கு வரவுள்ளது. அதற்கமைய காலை காலை 5:30, 5:45 மற்றும் காலை 6:00 மணிக்கு ரம்புக்கணையிலிருந்து இப்பேருந்துகள் புறப்படும். இப்பேருந்துகள் முறையே இரவு 7:45, இரவு 8:15 மற்றும் இரவு 9:00 மணிக்கு ரம்புக்கனையை சென்றடையும்.

அதிகாலை 4 மணி, 4.15 மற்றும் 4.30 மணிக்கு கண்டியிலிருந்து கொழும்புக்கான பேருந்து சேவைகள் இடம்பெறும். மேலும் காலை 5 மணி, 5.15 மற்றும் 5.30க்கு குருநாகலிலிருந்து கொழும்புக்கு பேருந்து சேவைகள் இடம்பெறும். மாலை வேளைகளில் 4.45 மணி, 5.15 மற்றும் 6 மணிக்கு கொழும்பிலிருந்து கண்டிக்கான பேருந்து சேவைகள் இயக்கப்படும். இதேவேளை மாலை 4.45, 5.30 மற்றும் 6.15 மணிக்கு கொழும்பிலிருந்து குருணாகலுக்கான பேருந்து சேவைகள் இடம்பெறும் என போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

# 500 உற்பத்தி நிறுவனங்கள் பேரிடரால் கடும் பாதிப்பு

நாடு முழுவதும் பல்வேறு தொழில்கள் உட்பட கிட்டத்தட்ட ஐநூறு உற்பத்தி நிறுவனங்கள் வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகள் காரணமாக பல்வேறு பேரழிவுகளால் பாதிக்கப்பட்டுள்ளதாக கைத்தொழில் மற்றும் தொழில்முனைவோர் மேம்பாட்டு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

பாதிக்கப்பட்ட உற்பத்தி நிறுவனங்களில் கணிசமான எண்ணிக்கையிலானவை ஏற்கனவே தங்கள் வணிக நடவடிக்கைகளை மீண்டும் தொடங்கியுள்ளன என்று கைத்தொழில் மற்றும் தொழில்முனைவோர் மேம்பாட்டுப் பிரதி அமைச்சர் சதுரங்க தெரிவித்தார்.

வெள்ள நிலமை காரணமாக களனி பள்ளத்தாக்கில் உள்ள பல தொழிற்சாலைகள் இன்னும் செயல்பாடுகளைத் தொடங்க முடியவில்லை என்றும் துணை அமைச்சர் கூறினார்.

# மியான்மரிலிருந்து தனி விமானம் உதவிப் பொருள்களுடன் வருகை

பேரிடரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக மியன்மாரில் இருந்து உதவிப் பொருட்கள் அடங்கிய விமானம் நாட்டை வந்தடைந்தது. மியான்மார் விமானப்படையின் வை8 (கூ8) விமானம் சனிக்கிழமை இரவு காட்டுநாயக்க விமானப்படைத் தளத்தை வந்தடைந்தது.

அத்தியாவசிய மற்றும் மருத்துவப் பொருட்கள் என்பன இதில் எடுத்து வரப்பட்டுள்ளன. இதனை மியான்மருக்கான இலங்கைத் தூதுவர் மார்லர் தான் ஹ்தைக், மியன்மர் ஆளும்தரப்பின் வெளியுறவு அமைச்சின் பணிப்பாளர் ஜெனரல் சாவ் பியோ வின் ஆகியோர் ஆளும்தரப்புப் பிரதிநிதிகள் குழுவினரிடம் கையளித்தனர். இலங்கை விமானப்படையின் திட்டமிடல் பணிப்பாளர் எயார் வைஸ் மார்ஷல் தேசப்ரிய சில்வா மற்றும் விமானப்படை அதிகாரிகளும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.பல மாவட்டங்களில் அதிக எண்ணிக்கையிலான மக்களை இடம்பெயரச் செய்த கனமழை மற்றும் வெள்ளப்பெருக்கு காரணமாக, இலங்கை பல நாடுகளிடமிருந்து அவசரகால உதவிகளைப் பெற்று வருகிறது. அந்த வகையில் தற்போது மியன்மார் தனது உதவிகளை வழங்கியுள்ளது.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 08.12.2025இல் வெளியிடப்பெற்றது